**உள்ளூராட்சி மன்ற அமைச்சரின் 2022 செப்டம்பர் 6 ஆம் திகதிய 2296/05 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கலைக்கப்பட்ட கேகாலை நகர சபையின் 2023 மார்ச் 19 ஆம் திகதி முடிவடைந்த காலப்பகுதிக்கான**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 அதிகாரம்) 14 ஆவது பிரிவின் கீழ் உள்ளூராட்சி மன்ற அமைச்சரின் 2022 செப்தம்பர் 06 ஆம் திகதிய 2296/05 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கலைக்கப்பட்ட கேகாலை நகர சபையின் 2023 மார்ச் 19 ஆம் திகதி முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 மார்ச் 19 ஆம் திகதி முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 அதிகாரம்) 181(1) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2023 மார்ச் 19 ஆம் திகதி உள்ளவாறு கேகாலை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (l) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு**

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை- | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களுடன் உள்ள நாட்குறிப்பு பதிவுகள் கையொப்பமிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு இருக்க வில்லை. | எதிர்வரும் காலங்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஒவ்வொரு நாட்குறிப்பு பதிவும் அங்கீகரிக்கப்பட வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீதிமன்ற தண்டப்பன வருமானம் ரூபா 110,500 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டும். |
| (ஆ) | 2023 மார்ச் 19 ஆம் திகதி வரை மார்ச் மாதத்திற்காக செலுத்த வேண்டிய உறுப்பினர் படிகள் ரூபா 436,670 தொகையும் பதவியணியினர் சம்பளம் ரூபா 4,099,042 தொகையும் செலவினம் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (இ) | பெற வேண்டிய முத்திரை கட்டண வருமானம் ரூபா 33,176,830 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (ஈ) | 2023 மார்ச் 19 ஆம் திகதி உள்ளவாறு பெற வேண்டிய வாரச் சந்தை தண்டப்பணம் ரூபா 104,922 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (உ) | 2017 முதல் 2022 வரை நகர சபை மண்டபத்தை ஒதுக்குவதற்காக கிடைத்த ரூபா 2,466,022 தொகை மற்றும் களியாட்ட வரிக்காக கிடைத்த ரூபா 5,546,398 தொகை அந்தந்த ஆண்டுகளில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் அந்த அளவினால் திரண்ட நிதியம் குறைத்துக் காண்பிக்கப் பட்டிருந்தது. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வு காலப்பகுதியில் நகர சபை மண்டபத்தை ஒதுக்கு வதற்காக கிடைத்திருந்த ரூபா 645,000 தொகை மற்றும் களியாட்ட வரி வைப்பு ரூபா 1,320,000 தொகையை வருமானத்திற்கு எடுக்காமையால் அப்பெறுமானத்தினால் வருமானம் குறைத்துக் காண்பிக்கப் பட்டிருந்தது | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (எ) | முன்னைய ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 348,931 ஆன மின்சார பிரிவின் இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (ஏ) | 04 வெவ்வேறு விடயங்களுக்காக கிடைத்திருந்த மொத்தம் ரூபா 1,594,518 தொகை வருமானத்திற்கு எடுக்கப்படாமல் வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தையால் திரண்ட நிதியம் அப் பெறுமானத்தினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு- | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வு காலப்பகுதி இறுதியில் 10 கணக்கு விடயங்களின் நிதிக் கூற்றுகளின் பிரகாரம் மீதிகள் பயன்பாட்டு பதிவேடுகளுடன் ஒப்பிடும் போது ரூபா 692,006 ஆன வேறுபாடு காணப்பட்டது. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பயன்பாட்டு பதிவேடுகள் கணக்கு மீதிகளுடன் ஒப்பிட்டு சீசெய்யப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்ளுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| i நிதிப் பிரமாணம் 373 | அனைத்து கட்டுநிதிகளும் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 2013 ஜூலை 08 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 25,920 ஆன முற்பணங்கள் 2023 மார்ச் 19 ஆம் திகதி வரையில் தீர்வு செய்யப்பட்டு இருக்கவில்லை | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. நிதிப் பிரமாணம் 571 | மொத்தம் ரூபா 9,871,826 ஆன காலாவதியான 211 வைப்புக்கள் தீர்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | - மேற்படி - |
| (ஆ) 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 05/2018(1) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தி | பிரஜைகள் / சேவை நாடுனர் பட்டயத்தை தயாரித்தல் மேற்பார்வை மற்றும் மதிப்பீடு செய்வதற்கு சபையால் நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 2020 ஆகஸ்ட் 2 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சபையினால் நிறை வேற்றப்பட்ட செயற் பாடுகள் நடைமுறைகளை தெளிவுபடுத்தும் வகையில் அதன் செயன் முன்னேற்றத்தை அளவிடக்கூடிய மூன்று செயலாற்றல் குறிகாட்டிகள் இனங் காணப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | உள்ளூராட்சி மன்ற சுற்றறிக்கை | | | |
| i | 2018 ஜூலை 19 ஆம் திகதிய 2018/e ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற 01 ஆம் இலக்க சுற்றறிக்கை | இணையத்தின் மூலம் கொடுப்பனவு செய்வதற்கு பிரஜைகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படாமல் இருந்தத்துடன் மக்கள் மயப்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கு வதற்காகவும் பொது அலுவலக வாடிக்கையாளர் சேவை நிலையம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | வீதவரி அறவீட்டிற்காக 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2000 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு அடிப்படையில் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஆதனங்கள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருவதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2023 மார்ச் 19 ஆந் திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,837,390 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வு காலப்பகுதிக்குரிய பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | நிலுவை வருமானம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 3,145,207 | 3,865,882 | 5,041,024 |
| வாடகை | 16,881,315 | 15,470,060 | 7,753,337 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 986,878 | 513,308 | 573,800 |
| ஏனைய வருமானம் | 17,623,991 | 21,703,322 | 27,077,277 |
| மொத்தம் | 38,637,391 | 41,552,572 | 40,445,438 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வு காலப்பகுதிக்குரியதாக வழங்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய நிலுவை வீதவரி மீதி ரூபா 5,041,024 ஆக இருந்தது. வீத வரிக்காக பயன்படுத்தப்படுகின்ற மென்பொருளின் பிரகாரம் நிலுவை வீதவருக்காக அறவிடப்படும் தண்டப்பணம் மற்றும் காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் பொருத்தமான கணனி மென்பொருள் ஒன்றை பெற்றுக் கொள்வதாக | நிலுவை வரி தொகையை அறவிடப்பட வேண்டியதுடன் தண்டப் பணம் மற்றும் காலப் பகுப்பாய்வு தொடர்பான தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| i | மீளாய்வு காலப்பகுதி இறுதியில் அறவிடப்பட வேண்டிய நிலுவை கடை வாடகை மீதி ரூபா 3,020,658 ஆக இருந்ததுடன் 01 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 448,300 மற்றும் 05 ஆண்டுகளை கடந்த மீதி ரூபா 765,110 ஆக இருந்தது. | பந்திக்கு உரிய கருத்துரை சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை | நிலுவை கடை வாடகை வருமானம் அறவிடப்பட வேண்டும் |
| ii. | காலப்பகுதியின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய கடை வாடகை தண்டப்பண மீதி ரூபா 2,348,068 ஆக இருந்ததுடன் 5 ஆண்டுகள் கடந்த மீதி ரூபா 2,055,364 ஆக இருந்தது | இதுவரை ரூபா 226,729 தொகை அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நிலுவை கடை வாடகை தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும் |
| iii. | அறவிடப்பட வேண்டிய வாடி வீட்டு வாடகை மீதி ரூபா 2,474,645 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,110,200 தொகை 01 இற்கும் 03 ஆண்டுகளுக்கு இடைப்பட்டு இருந்ததுடன் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 502,026 ஆக இருந்தது. | குத்தகையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஒக்தோபர் 02 ஆம் திகதிய 5/2020 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் 11 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக ஓட்ட நிலைமையில் காணப்படாத 04 வாகனங்கள் | கைத்தவிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொடர்பாக கைதவிர்ப்பதற்கு அல்லது திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) 02 ஆண்டுகள் முதல் 04 ஆண்டுகள் 03 மாதங்கள் வரையான காலப் பகுதியில் 03 வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தாத இருந்ததால் குறைப் பயன்பாட்டில் காணப்பட்டன. | HE-1729 ஆம் இலக்க பெக்கோ இயந்திரத்தை திருத்துவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | சொத்துக்களை குறைப் பயன்பாட்டிற்கு உட்படுத்த கூடாது |

**4 கணக்களிதன்மையும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2023 மார்ச் 19 இல் உள்ளவாறு நிதி நிலைமை கூற்று அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுகளுக்குரிய குறிப்புகள் மற்றும் 2023 மார்ச் 19 இல் உள்ளவாறு கலைப்பு கணக்கு கணககாய்விற்காக 2024 ஆகஸ்ட் 08 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஜனவரி 1 ஆம் திகதி முதல் 2023 மார்ச் 19 ஆம் திகதி வரை நகர சபைக்குரிய கணக்கு களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2024 மே 22 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. அதன் பிரகாரம் உரிய கணக்குகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நகர சபையால் 2023 மார்ச் 19 இல் உள்ளவாறு 2023 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தபடாமல் இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் ஒரு கூட்டம் மாத்திரம் நடத்தப்பட்டிருந்தது. | ஏதிர்காலத்தில் காலாண்டு அடிப்படையில் கணக்காய்வு மற்றும் கணக்காய்வு குழுவை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக | 2018 ஒக்டோபர் 19 ஆம் திகதிய 2/2018/14 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நகர சபையின் 2023 மார்ச் 19 இல் உள்ளவாறு உரிய காலப்பகுதிக்காக உள்ளக கணக்காய்வு விசாரணை வழங்கப்பட்டிருக்கவில்லை | உள்ளக கணக்கு விசாரணை சமர்ப்பிக்கப்பட வில்லை என்பதாக | உள்ளக கணக்காய்வினை மேற்கொண்டு விசாரணை வழங்கப்பட வேண்டும். |